## பிபிஆர் - பிஏ குடியிருப்புகளின் வாடகை பாக்கி

# 70 மில்லியன் ரிங்கிட்டை எட்டியது

### டத்தோ பண்டார் தகவல்

கோலாலம்பூர், மே 21- பொது வீடமைப்புகளில் (பிஏ) வீடுகளில் வாடகைக்குக் குடியிருப் போர் பலர் 26 ஆண்டுகள் வரைகூட வாடகைப்பணம் செலுத்தாமல் உள்ளனர் என்று கோலாலம்பூர் டத்தோ பண்டார் மைமுனா முகமட் ஷாரிப் நேற்றுத் தெரிவித் தார். இவர்களின் வீட்டு வாடகை பாக்கி 39,140 ரிங்கிட்டாகும் என அவர் குறிப்பிட்டார்.

வீட்டு வாடகை மாதம் 124 ரிங்கிட்டாகும். பராமரிப்புச் செலவும் இதில் அடங்கும். கம்போங் முஹிபா பிபிஆர் குடியிருப்பில் வாடகை பாக்கி 19 லட்சம் ரிங்கிட் டாகவும் டேசா ரிஜாங் பிபிஆர் குடியிருப்பில் வாடகை பாக்கி 12 லட் சத்து 80 ஆயிரம் ரிங்கிட் டாகவும் உள்ளது என்று அவர் சொன்னார்.





கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் நிர்வாகத்தில் இருக்கும் பிபிஆர், பிஏ குடியிருப்புகளுக்கான வாடகை பாக்கி இப்போது 70 மில்லியன் ரிங்கிட்டை எட்டியிருக்கிறது. அடுத்த வாரம் இந்த விவகாரம் குறித்து விவா திக்கப்படும் என்று அவர் கூறி னார். முதலில் நான் இதுபற்றி கவனிக்கவிருக்கிறேன். இப்போது என்ன நட வடிக்கை எடுப்பது என்பது பற்றி சிந்திக்க வேண் டும். வாடகை பாக்கி வைத்திருப் போரிடம் சந்திப்பு நடத்த வேண் டும். ஏன் வாடகை செலுத்தத் தவறுகிறீர்கள் என்று அவர் களிடம் கேட்க வேண்டும். வேறு வழியில்லாதபட்சத்தில் அவர் களின் குடிநீர் மீட்டர் பூட்டப் படும் என்று அவர் எச்சரித்தார். வாடகை பாக்கி செலுத்தத் தவறினால் அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றும் அதிகாரம் எங்களுக்கு உள்ளது. ஆனால் இவர்கள் பி40 தரப்பைச் சேர்ந்த வர்கள். அதனால் என்ன செய்ய லாம் என்று யோசிக்க வேண்டும். இதுபற்றி ஆய்வு நடத்தப்படும்.

பிரதமர்துறை கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோ டாக்டர் ஸலிஹா முஸ்தாபாவுடன் பேச்சு நடத்தப்படும் என்று அவர் கூறினார். வாடகை செலுத்த முடியாத பலர் தங்களிடம் போது மான பணம் இல்லை என்றுதான் காரணம் சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் குடியிருக்கும் இடத் திற்கு நாங்கள் சென்றால் கார்களை நிறுத்துவதற்குப் போதுமான இடவசதி இல்லை என்கிறார்கள். ஆனால் அவர்களால் வாடகை செலுத்த முடிய வில்லை என்கிறார்கள். கார் என்பது ஆடம்பரத்திற்கு உரியது அல்ல என்பதையும் அது ஒரு தேவை என்பதை யும் நான் புரிந்து கொள் கிறேன் என்று அவர் கூறி னார். எதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இப்போதைக்கு நாங்கள் கடுமையான நட வடிக்கை எடுக்கவில்லை. அவர்கள் வாடகை பாக்கி யைச் செலுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று அவர் கூறினார்.